Vol. 20, No. 01 (October 2026) – Part III • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

M. Sundararajan, Retd. Addl. Supdt. of Police, Coimbatore

தொல் தமிழ்க் குறவர் பழங்குடியினரின் உன்னதமான பண்பாட்டு, ஆன்மிக வரலாறும் அவர்க்கு இழைக்கப் பட்ட பிற்காலத்திய

அநீதிகளும்

கட்டுரைச் சுருக்கம் : *குறவர் இனம் குறித்து முழுமையாக எவரும் எழுதியதாகத் தெரியவில்லை.* ***குறவர் யார் ?*** *யார் என்பதற்கு முன்,* ***யார் இல்லை*** *என்பதைத் தான் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். ஆரிய வாகிரி போலி மொழி பேசிக் கொண்டு, ஊசிமணி, பாசிமணி விற்கும் நரிக்குறவர் என அழைத்துக் கொள்ளும் குருவிக்காரர்கள் வேறு, தொல் தமிழ்க் குறவர் வேறு.*

ஒரு காலத்தில் இலங்கை தாண்டி நீண்டிருந்த தென்னிந்திய மலைகளில் (இந்தியா, இலங்கை இரண்டும் ஒரே நிலமாக இருந்த காலகட்டத்தில்) மனித இனம் தோன்றிப் பின் சமவெளியில் பரவிய போது குன்றுகளிலேயே தங்கள் வாழ்வைத் தொடர்ந்தவர்கள் பிற்காலத்தில், ‘ ***குறவர்****’ என அழைக்கப் பட்டனர். 'குன்றவர்’ (குன்றில் வாழ்பவர்) என்பதன் திரிபு. அவர்கள் வாழ்ந்த மலைப் பகுதி குறிஞ்சி நிலம் எனப் பட்டது.*

ஆங்கிலேயர் உட்பட, குறவர் குறித்து எழுதியோர் பெரும்பாலும் இவர்களது மலை வாழ்வை அறிந்திருக்க வில்லை. இவர்களது குடிப் பெயர் குறவர் என்ற போதிலும், தமிழ் இலக்கியங்களிலும், தென்னிந்தியா முழுமையிலும் இவர்களுக்குப் பல அழைப்புப் பெயர்கள் உண்டு. இவர்களது மிகச் சிறந்த மலைவாழ்க்கை குறித்தும், பிற்காலத்தில் அவர்களுக்கு நேர்ந்த இன்னல்கள் குறித்தும் சுருக்கமாகக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்..

திறவுச் சொற்கள்: *குன்றவன், நரிக்குறவர் / குருவிக்காரர்கள், குறியெயினி, சேயோன் / சீயான், மலைவாழி, மலங்குறத்தி, தினைப் புனம், காவடி, இலங்கை வேடர், மேலூரத்தன், சாத்துப்படி.*

Key Words: *Kunravan, Nari Kuravar / Kuruvikaarar, Kuriyeyini, Seyon / Seeyaan, Malaivaazhi, Malankurathi, Thinaipunam, Kaavadi, Cylon Veddas, Maeloothan, Saathupadi.*

1. *குறவர் சிறப்புகளில் சில:.*

அ) சங்கப் பாடல்கள்: *:சங்க நூல்களில் குறவர்களது மலை வாழ்வு பற்றிய செய்திகள் நிறைய உள்ளன. குறிஞ்சிப் பாட்டின் 260 அடிகளும், ஐங்குறு நூறில் 500 பாடல்களில், 100 குறிஞ்சித் திணைப் பாடல்களும் குறவர்கள் குறித்தனவே. நற்றிணை தரும் 400 பாடல்களில் குறவர்கள் குறித்த பாடல்கள் 131 ஆகும். குறுந்தொகை தரும் 401 பாடல்களில் 147 குறவர் குறித்த குறிஞ்சித் திணைப் பாடல்களே. அகநானூறில் 80 பாடல்களும், கலித்தொகையில் 29 பாடல்களும் குறிஞ்சித் திணைப் பாடல்களே.*

ஆ) சேயோன் / முருகன் *: சேயோன் என்றால் பின்னோக்கி ஐந்தாம் தலை முறை இன மூத்தோன் என அகராதி கூறுகிறது* **1** *. தற்போதும் மதுரைப் பகுதிகளில் சீயான் என்ற வார்த்தை பயன் பட்டில் உள்ளது. தாத்தாவிற்குத் தந்தையை அப்படி அழைக்கிறார்கள். .* ***மூன்றாம் பாட்டன்*** *என அகராதி பொருள் கூறுகிறது. 2..இன மூத்தோனைக் குறிக்கும் ‘ சேயோன் ’ தான் சீயானாக மருவியிருக்கிறது முருகன் குறவர் குடி*

மூத்தோனே. முருகனுக்கு, குறவர் குடித் தலைவனைக் குறிக்கும் வெற்பன், பொருப்பன், சிலம்பன் என்ற பெயர்களும் உண்டு

ஐங்குறுநூறு 259
குன்றக் குறவன் காதல் மட மகள்............

மலை உறை கடவுள் குலமுதல் வழுத்தி

குன்றக் குறவனின் அன்பு மகள் வேங்கை மலர்களால் மலையில் வாழும் தன் **குல முதலான** தெய்வம் முருகனுக்குப் பூசனை செய்து வணங்குகிறாள்.

இப்பாடல், சேயொன், குறவர் குல மூத்தோனே என்பதை உறுதிப் படுத்துகிறது..

திரிகூடராசப்பக் கவிராயரின் திருக்குற்றாலக் குறவஞ்சி
கண்ணி கொண்டு வா!
(3) மீறு மிலஞ்சிக் குறத்தியைக் கொண்டசெவ்
வேட்குற வன்முதல் வேட்டைக்குப் போனநாள்

இலஞ்சி என்பது குற்றாலத்திற்கு அருகிலுள்ள ஒரு ஊர்; அங்குள்ள குறத்தியான **வள்ளியை** மணந்த குறவன் செவ்வேள் (**முருகன்**) வேட்டைக்குச் சென்றதைக் குறிக்கிறது. முருகன், செவ்வேட் குறவன் என்றே குறிக்கப் படுகிறான்.

இ) பெண்டிர் பெருமை : *சங்க காலத்திய 56 பெண்பாற் புலவர்களில் குறவரினப் புலவர்கள் மூவர் இருந்துள்ளனர்.' குறமகள்' எனக் குடிப் பெயரால் அடைமொழி யிட்டு அழைக்கப் பட்டுள்ளனர். குறமகள் இளவெயினி – புறனானூறு 157, குற மகள் குறியெயினி – நற்றிணை 357, பேய்மகள் இளவெயினி - புறநானூறு. 11*

தமிழ்ப் பெண்களின் வீரத்தினைக் குறிப்பிடும் எவருமே 'தமிழச்சி புலியை முறத்தால் விரட்டினாள்' என்பதைக் குறிப்பிடத் தவறுவ தில்லை. அந்த வீரத் தமிழச்சி வேறு யாரும் இல்லை; குறத்தியே.

"முறத்தினால் புலியைத் தாக்கும்
மொய்வரைக் குறப்பெண் போல--------"
(மகாகவி பாரதியார் - பெல்ஜியம் வாழ்த்துக் கவிதை) 3

ஏ) *"கரூர் அமராவதி ஆற்றுப் படுகையில், 'குறவன்' தமிழ்ப் பிராமி எழுத்துப் பொறிக்கப் பட்ட குறவர் குடி அரசரின் வெள்ளி முத்திரை கிடைத்தது.20*

2 பழங்குடி, பூர்விகத் தன்மை (Primitive and Oboriginal) :

அ) *குறவர் வாழ்வியல் புதிய கற்காலத்திலிருந்தே தொடங்குகிறது.* **P.T. Srinivasa Iyengar,** *குறவர்கள், புதிய கற்கால மலை மனிதர்களின் வாரிசுகள் என்றும், புதிய கற்காலத்தில், கற்கருவிகள் செய்வதில் குறவர்கள் சிறந்து விளங்கி யுள்ளனர் என்றும். வில் அம்பு, நெருப்பு உண்டாக்குவது அகியவையும் அவர்களது கண்டுபிடிப்பே என்றும்.கூறுகிறார்* **4**

ஆ) Somerset Playne*, இந்த மண்ணின் தொடக்க வரலாறு குறித்து எழுதும் போது.* **Dr.Keane** *தென்னகத்தின் குறவர், ஒரிஸ்ஸாவின் ஜாங் பழங்குடியினர் ஆகியோர் பழைய கற்கால மனிதர்களின் வாரிசுகள் என்று கருதுவதாகக் கூறுகிறார்.***5**

இ) மூத்த பழங்குடிகளுக்கே தெய்வமாகி நிற்றல்: (Deification by the Elder Tribes) *:தமிழகப் பழங் குடிகளில் மிக மூத்தவையான காடர், பாணன் போன்றவை குறவன் – குறத்தியைத் தங்களது ஆதி தெய்வங்களாக வணங்கி வரும் வழக்கமே குறவர் இனக் குழுவின் தொன்மைக்குச் சான்று.*

காடர்களின் குறவன் – குறத்தி வழிபாடு குறித்துச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் மானுடவியல் தலைவர் முனைவர் யூ.ஆர். எரென்ஃபெல்ஸ் (Dr, U. R. EHRENFELS, ph. D , Head of the Department of Anthropology, University of Madras,) 1952 ல் வெளியிட்ட ' கொச்சியின் காடர் ' (KADAR OF COCHIN) என்ற தனது புத்தகத்தில் மிகவும் விரிவாகக் கூறியிருக்கிறார். 6

முன்னாள் கொச்சி மாநில இனவியல் கண்காணிப்பாளர் எல்.கே. அனந்தகிருஷ்ண ஐயர் (L. K. ANANTHA KRISHNA IYER, The Superintendent of Ehnography, Cochin State;) என்பாரும் 1909 ல். வெளியிட்ட தனது ' கொச்சியின் பழங்குடியினரும் சாதிகளும் பகுதி I ' (COCHIN TRIBES AND CASTES. VOLUME [.) புத்தகத்தில், காடர்களின் ' மலைவாழி '(Malavazhi - ruler of hills) வழிபாட்டைக் குறிப்பிடுகிறார்.

அவரே, அதே புத்தகத்தில் ' பாணர் ' களின் ' மலங்குறத்தி ' (Malankorathi) வழிபாட்டைப் பற்றிக் கூறுகிறார். 7

ஈ) இலங்கை வேடர்கள் (Cylon Veddas) *உலகின் மிக மூத்த பழங்குடியினர் என்பது அனைத்து மானுட வியல் அறிஞர்களின் ஒருமித்த கருத்து.* ***Sri Lanka's Indigenous Wanniya -laeto: A Case History*** *என்ற வெளியீடு, வேடர்கள் இலங்கை மண்ணின் கற்கால மனிதர்களின் வாரிசுகளே என்கிறது. 8*

அதிலும், Charles Seligmann , Brenda Seligmann இருவரும் The Veddas (Page 156, 422) என்ற புத்தகத்தில் அவர்கள், தென்னிந்தியத் திராவிட வனப் பழங்குடிகளைச் சேர்ந்தவர்களே என்கின்றனர். 9

வேடர் என்ற பெயர் தமிழகக் குறவரையும், இலங்கை வேடரையும் இணைப்பதால், அவர்கள் கூறும் பழங்குடி, குறவரே என்பதில் ஐயம் இல்லை. இலங்கை வேடர் வள்ளி - முருகனை அக்கா - மச்சான் என்பதாகவும் கூறியுள்ளனர். 9 முனைவர் பக்தவச்சல பாரதியும் இதே தகவலை ' இலங்கையில் சிங்களவர் ' என்ற புத்தகத்தில் தெரிவித்துள்ளார். தமிழகக் குறவர்களுக்கு, வள்ளி – முருகன் யாராக வேண்டும் என்பதை விளக்க வேண்டியதே இல்லை.

இந்தியா, இலங்கை இரண்டும் ஒரே நிலப் பரப்பில் இருந்த காலத்தில், இலங்கை வேடரும் தமிழகக் குறவரும், ஒரே இனக் குழுவாகத்தான் வாழ்ந்திருந்திருந்திருக்கிறார்கள்.

3. பண்பாடு (Culture)

i) களவுவழிக் காதல்: Prenuptial Love

P.T. Srinivasa Iyengar *குறிஞ்சி நிலத்துக் குறவரிடம் தான் மனிதக் கலாசாரத்தின் முதல் படி தொடங்கியதாகவும், களவு வழிக் காதல் மூலம் திருமணங்கள் நடந்திருப்பதையும் குறிப்பிடுகிறார்.. 10*

ii) போர் (War)

போருக்கு முன்னரான ஆநிரை கவர்தல்,(வெட்சி) ஆநிரை மீட்டல் (கரந்தை) ஆகிய தமிழருக்கே உரிய போரிலக்கணம் குறவர்களிடம் தான் தோன்றியதாக ***P.T. Srinivasa Iyengar*** *கூறுகிறார்.* 10

மலைபடுகடாம் 320

அரும் குறும்பு எறிந்த கானவர் உவகை..........

சிற்றூர்களை வென்று அதனைச் சூறையாடும் குறவர், குறமகளிரின் மகிழ்ச்சி.

iii) தெய்வ வழிபாடு (Worship)

a) குறிஞ்சியின் முருகன் (சேயோன்) வழிபாடு:

தொடக்கத்தில், *மலைகளில் குறவர்கள் தங்கள்* ***குலமூத்தோனாகச்*** *சேயோன் முருகனை வழிபட்டனர். திறந்த வெளிகளில் வேலை வைத்தும், பின்னர் நடுகல் நட்டும். வழிபட்டனர். பின்னர், மலைகள் தோறும் முருகனுக்குக் கோவில்கள் அமைத்து வழிபட்டனர். இவர்கள் வழிபாட்டில், விலங்குப் பலியும், வேலனாடல் / வெறியாடலும், கழங்குக்காய் ஆருடமும், குரவைக் கூத்தும், வள்ளிக் கூத்தும் இருந்தன.*

பிற்காலத்தில், *ஆலயங்களில் தமிழக ஆரியப் பிராமணர்கள் பூசை உரிமையைக் கைக்கொண்டனர். முருகனுக்கு விலங்குப் பலி. உள்ளிட்ட தொடக்க நிலைச் சடங்குகள் அனைத்தும் தவிர்க்கப் பட்டு, தமிழ்க் கடவுளாக இருந்த முருகன், ஆரிய ஸ்கந்தனோடு கலக்கப் பட்டு, சுப்ரமணியன், ஆறுமுகன், குமரன், குகன், கார்த்திகேயன் போன்ற ஸ்கந்தப் பெயர்களும் அவனுக்கு வழங்கப் பட்டன. குற வள்ளி , ஸ்கந்தன் மனைவி தெய்வானைக்கு இளைய சகக் கிழத்தி ஆக்கப் பட்டாள்..*

புறநானூறு பாடல் 143 *இப்பாடல், முருகனை வழிபட்டு, மழை பெய்விக்கவும் மிகையான மழையை நிறுத்தவும் குறவர்களால் கூடும் என்று குறிப்பிடுகிறது.* **......................மாரி ஆன்று மழைமேக்கு உயர்களனக் கடவுட் பேணிய குறவர் மாக்கள் ....**

b) ***வேலன் ஆட்டம்*** **/ வெறியாடல் :** *குறவரின் மிகத் தொன்மையான வழி பாட்டு முறை. .இறைச் சக்தி மனிதர் மூலம் ஆவேசமாக வெளிப் படுவதே இது. காதலர்களுடன் களவுக் காதலில் கூடிய குற மகளிர் உடல் பிரிவுத் துயரால் நலிவுறுவதற்கு முருகன் மீது கொண்ட காதலே காரணம் என்று கருதி, நலம் மீட்க, முருகனுக்கு வெறியாடல் நடத்துவது குறவர் வழக்கம்..*

குறவர்களின் பூசாரி வேலன் . முருகனின் அடையாளமான வேலைக் கையில் கொண்டு முருகப் பெருமானைப் போற்றிக் கொண்டே, வெறியாடுவான்.. வெறியாடிக் குறி சொல்லும் போது கழங்குக் காய்களை உருட்டி எண்ணிக்கையின் படி பலன் சொல்லுவது வழக்கம்

வெறியாடல் குறித்துக் கூறும் சங்க இலக்கியப் பாடல்கள் நிறைய உள்ளன. இதனைச் சிறப்பித்துப் பாடிய ஒரு புலவர், 'வெறிபாடிய காமக் கண்ணியார்' எனப்பட்டார்.. ஐங்குறுநூறில் வெறியாடலுக்கென்றே வெறிப் பத்து என்ற பெயரில் அற்புதமான 10 பாடல்கள் உள்ளன..

c) காவடி தூக்குதல்

பொருது தொலை யானைக் கோடு சீர் ஆகத், தூவொடு மலிந்த காய
கானவர், ,(*மலை* 151-155)

குறவர் சுமையை யானைத் தந்தங்களின் இரு புறமும் பகிர்ந்து கட்டித் தோளில் எளிதாகத் சுமப்பதை இப்பாடல் காட்டுகிறது. பின்னர், குல தெய்வம் முருகனின் மலைகளுக்குச் சென்று வழி பட, தடியில் காவுச் (பலி, படையல்), சுமையைக் கட்டித் தூக்கிச் செல்ல, அதுவே காவுத் தடி எனப் பெயர் பெற்று, பின்னர், காவடி ஆகிப் பின்னர் முருகனின் வழிபாட்டு அடையாளமாகியது.

d) *குல முறை வழிபாடு* : (Clan / Gothram) : குறவர் *மக்கள்* அவர்கள் மண உறவுகளை முறைப் படுத்தவும், முருகனை வழி படவும் ஆறு குலங்களைப் பின்பற்றுகின்றனர். *அவை, முருகன் பூசை வழியில் வந்தவை.* ***Frederick S. Mullaly, Notes on Criminal Classes of the Madras Presidency 1892*** *புத்தகத்தில் .இதனை விளக்கி யுள்ளார் 1.காவடி எடுப்போர் காவடி குலத்தார்; 2..சிறந்த பாடல்களைப் பாடுவோர் மாணப்பாடி குலத்தார்; 3. சிலைக்கு மேலூற்றி அபிஷேகம் செய்வோர் மேலூத்தன் குலத்தார்,.4. ஆடை அணி கலன்கள் சாத்திச் சிலைக்கு மரியாதை செய்வோர் சாத்துப்படி குலத்தார்; 5.சிலையை ஊஞ்சலில் வைத்து ஆட்டுவோர் உய்யாலி குலத்தார், 6.வண்டியில் / தேரில் சிலையை வைத்து இழுப்போர் பண்டி குலத்தார்; (பிற்காலத்தில், உய்யாளி காவடியுடனும், பண்டி மாணப் பாடியுடனும் இணைந்து விட்டன.)11****அதே குறவர்கள் பின்னாளில் தீண்டாமைக்கு உள்ளாக்கப் பட்டதுதான் பெரும் கொடுமை..*** *தற்போது கோவில்களில் பிராமண அர்ச்சகர்கள் குறவர்களின் வழி பாட்டுச் சடங்குகளைத் தானே செய்கிறார்கள்.!*

:e) குரவைக் கூத்து

கலித்தொகை, ‘ பண் அமை இன்சீர்க் குரவை' என்றும் *நற்றிணை,, வேங்கை முன்றில் குரவை’ என்றும், மதுரைக் காஞ்சி, 'மன்று தொறு நின்ற குரவை’ என்றும், அகநானூறு 'கொண்டல் இடுமணல் குரவை' என்றும் ஐங்குறுநூறு 'வெண்மணல் குரவை' என்றும், இதனைக் கூறுகின்றன.*

மயில் கண்டன்ன மடநடை மகளிரொடு ...... (தி.மு.ப.205-217)

முருகனே மலைகள் தோறும் மகளிருடன் ஆடிக் களிப்பதாகக் கற்பனை செய்து உள்ளார் புலவர், முருகன் குறித்த வருணனைகள் மிக அருமை யெனினும், நக்கீரர், முருகனை, கோபிகைகளுடன் காமக் கொட்டமடிக்கும் கண்ணனாக்க முயன்றிருப்பது பொருத்தமற்றது. பிராமணர்கள் முருகனை ஸ்கந்தனாக்கிய கொடுமைக்குத் துணை போகிறார்.

f) வள்ளிக்கூத்து : தொல்காப்பியத்தில் வள்ளிக் கூத்து என்றொரு நடனமும் குறிப்பிடப் படுகிறது.. வள்ளிக்கூத்து என்பது குறிஞ்சி நிலத்து மக்களின் கூத்து வகை. என்று T. Kavitha, **செ. மகேஸ்வரி** ஆகியோர் தங்கள் ஆய்வில் குறிப்பிடுகிறார்கள்.**12,13**

iv) வேளாண்மை (Agriculture): குறவர்கள் வேட்டைக் குடி என்றாலும் மலைப் பொருட்களைச் சேகரித்தும், வேளாண் தொழில் செய்தும் வாழ்ந்தனர். அவர்களால் தினை விளைவிக்கப் பட்ட நிலம் தினைப்புனமாகும்.

புறநானூறு 168.

……………………. கடுங்கண் கேழல் உழுத பூழி,
நன்னாள் வருபதம் நோக்கிக், குறவர் உழாஅது வித்திய பரூஉக்குரற்
சிறுதினை

காட்டுப் பன்றிக் குடும்பம் காந்தள் கிழங்கு களைக் கிண்டி உண்ணும். கிளறிய புழுதியில் குறவர்- உழாமலேயே தினையை விதைப்பர்.

குறமகளிர் தினைப்புனம் காத்த விதமும் இலக்கியங்ளில் சிறப்பாகக் கூறப் பட்டுள்ளது.

மலைபடுகடாம் 328 - 329
ஒலிகழைத் தட்டை புடையுநர் புனந்தொறும்
கிளிகடி மகளிர் விளிபடு பூசல்

மூங்கிலில் பாதியைப் பிளந்து செய்த தட்டையை முழக்கிக் கொண்டு தினைப் புனங்களில் மகளிர் கிளிகளை ஓட்ட சோ ...சோ ... என்று பாடும் பூசல் ஒலி

v) நயத்தகு விருந்தோம்பல் (Food & Hospitality) : குறவர்தம் விருந்தோம்பல், குறித்துப் தமிழ் இலக்கியங்களில் சிறப்பாகக் கூறப் பட்டுள்ளது.

மீனாட்சியம்மை குறம்

கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக் கிழங்குகல்லி யெடுப்போம்..................
செழுந்தினையு நறுந்தேனும் விருந்தருந்தக் கொடுப்போம் 18
பெரும்பாணாற்றுப்படை 170 – 185
ஏறித் தரூஉம் இலங்குமலைத் தாரமொட..........................

வீடுதோறும் பெறும் உணவு வகைகள். தேன், தேனில் பெறப்படும் தேறல் நறவு, தேங்காய் – அருவி அடித்துக்கொண்டு வந்த பழம். கடம்புமான்,. முள்ளம் பன்றிக் கறி, கொழுப்பை அரிந்து எறிந்துவிட்டுப் பங்கிட்டு வைத்த முளவுக் கறி, மாங்காய் போட்ட மோர்க்குழம்பு, நெல்லரிசிச் சோறு ....

vi) திருமணம் (Marriage) : *தொடக்கத்தில் இவர்களிடம் நிலவியது களவுவழிக் காதல் (Prenuptial) மணங்களே. பிற்காலத்திலும் அது தொடர்ந்தாலும், தற்போது,, திருமணங்கள் பல சடங்குகளைக் கொண்டிருக்கின்றன. பிற்காலத்திய குலமுறைப்படியான திருமண முறை, குறவரிடமிருந்தே பிற தமிழருக்கும் சென்றது.* ஒரே குலத்தில் திருமணத் தொடர்பு தவிர்க்கப் படுகிறது.

திருக்குற்றாலக் குறவஞ்சியில் திரிகூடராசப்பக் கவிராயர் இதற்கு ஒரு பாடலை எழுதியுள்ளார்.

................ஒருகுலத்திற் பெண்கள் கொடோம் ஒருகுலத்திற் கொள்ளோம்

5 வணிகக் குடி : (Trading Community) : *மலைகளில் வாழ்ந்த போதே, அவர்கள் சம வெளிக்கு வருவதும் வேட்டையாடிய விலங்கு இறைச்சி, தேன், தினை மாவு, மூங்கில் கூடை, மருத்துவ மூலிகைகள், கறிவேப்பிலை, மலையுப்பு போன்ற பொருட்களை எடுத்து வந்து பண்ட மாற்று முறையில் விற்பதும் வழக்கம். பெண்கள் கூடை முடைதல், குறி சொல்லுதல், கைரேகைப் பலன், பச்சை குத்துதல் போன்றவை மூலம் பொருளாதாரத்தில் சுதந்திரமாக இருந்துள்ளனர். சம வெளிகளில் குடியேறும் கட்டாயம் ஏற்பட்ட*

போது குறவர் உப்பு வணிகத்தில் கோலொச்சினர். கடற்கரைகளில் இருந்து உப்பை வாங்கி, கழுதைகள். காளைகளில் ஏற்றி நாட்டின் உட்பகுதியில் விற்றனர். அங்கு தானியங்களை வாங்கிக் கடற்கரைகளில் விற்றனர். இது வெள்ளையர் வருமுன் மன்னர்கள் காலமுதலே நடந்து வந்துள்ளது. **Dr Meena Radhakrishna -Dishonoured**, **by history** *குறவரை வணிகக் குடியென்றே குறிப்பிடுகிறார்.* **14**

6. *பூர்விக மலைகளில் இருந்து விரட்டப் படுதல்*: *சுமார் 900 ஆண்டுகளுக்கு முன் பிற சமவெளிச் சாதியினரால் இவ்வினம் மலைகளிலிருந்து விரட்டப் பட்டது., Madura Gazetteer page 93 & 94 15, Madura Country part II page 64 16, Salem Gazetteer Page 152 (Foot Note).17 Salem Gazetteer Page 153 18 North Arcot Manual Page 212 19(* ***தற்போது மலைகளில் வாழ்ந்து கொண்டு இருக்கும் சமூகங்களில். பல சம வெளியிலிருந்து பிற்காலத்தில் மலைகளுக்குச் சென்றவையே*** **).** *இயல்பான இனத்தொகை பெருக்கம், வெள்ளையரின் வனச்சட்ட அடக்குமுறை போன்றவையும் இவ்வினம் பிழைப்புத் தேடி மலைகளிலிருந்து கீழே இறங்கியதற்கான பிற காரணங்களாக. அமைந்தன.*

7. குற்றப் பழங்குடிக் களங்கம் (Criminal Tribe Stigma) : *குறவரினம் இயல்பில் திருட்டை வாழ்வாதாரமாகக் கொண்டிருக்க வில்லை. தொல் தமிழ் இலக்கியங்களில் மிக உயர்வாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது.*

மலைகளிலிருந்து இறங்கிய இந்த இனத்தார், கூடை முடைதல், ஈச்சமாறு செய்தல், பன்றி வளர்த்தல், பச்சை குத்துதல், குறிசொல்லுதல் ஆகிய பூர்விகத் தொழில்களோடு காதுவளர்த்தல், கிளி ஜோசியம், கறி வேப்பிலை, உப்பு, தானிய வணிகம், பாம்பாட்டுதல், கழைக்கூத்து, சவுரிமுடி செய்தல், ஈயப்பூச்சு போன்ற வற்றிலும் தங்களது வாழ்வாதாரங்களைத் தேடிக் கொண்டனர். இவை தவிர, திருட்டும், துப்புரவுத் தொழிலும் ***சிலருக்கு*** *துணைத் தொழில்கள் ஆகின.* ***அவர்களது உப்பு வணிகம் ஆங்கில அரசையே அசைத்துப் பார்த்தது.***

திருட்டைப் பிழைப்பாகக் கொண்ட பழங்குடிகளைக் கட்டுப் படுத்த 1871 ல் Criminal Tribes Act (குற்றப் பழங்குடிகள் சட்டம்) இயற்றப் பட்டு, நாடு முழுக்க 400 க்கு மேற்பட்ட பழங் குடிகள் அறிவிக்கை செய்யப் பட்டன.(Notified) உப்பு வணிகத்தைப் பரவலாகச் செய்து ஆங்கில அரசிற்குச் சவாலாக இருந்ததால் ஆங்கிலேய அரசு குறவரையும் பட்டியலில் சேர்க்க முயன்றது.

சென்னை ராஜதானியில் குறவர்கள் வணிகம் செய்த மொத்த மாவட்டங்களிலும் நடந்த குற்றங்களை ஒப்பிடும் போது, அவர்கள் புழங்காத ஒரேயொரு மாவட்டத்தில் நடந்த குற்ற அளவு அதிகம் என்று கண்டு, அப்போதையக் காவல் துறைத் தலைவர் (ஆங்கிலேயர்) அரசின் முடிவை எதிர்த்தார் (Dr.Meena Radhakrishnan) **14**

ஆனால், பின்னால் வந்த 1911 சட்டத் திருத்தத்தில் குறவர்கள் சேர்க்கப் பட்டார்கள்.. குறவர்களது உப்பு வணிகம் நசுக்கப் பட்டது. குறவர் என்ற ஒரே சாதியை, அதன் இருப்பிடம், செய்தொழில், பழக்கங்கள் அடிப்படையில் 27 அழைப்புப் பெயர்களில் குற்றப் பழங்குடிப் பட்டியலில் சேர்த்தது. அப்போது இழைக்கப் பட்ட அந்த அநீதி தான் இன்று வரை தொடருகிறது.. அந்த 27 ம்

தற்போது தனித் தனிச் சாதிகளாகக் கருதப் பட்டு அநீதி இழைக்கப் படுகிறது.

8. தொடரும் குற்றப் பழங்குடிக் களங்கம் *இந்திய விடுதலைக்குப் பிறகு 1949 ல் இச்சட்டம் திரும்பப் பெறப் பட்டது. குற்றப் பழங்குடிகள் சட்டத்தின் படி அறிவிக்கப் பட்ட பழங்குடிகள், (Nottified Tribes) அறிவிக்கை நீக்கப் பட்ட பழங்குடிகளாகத் (Denotified Tribes) தனிப் பட்டியலில் வைக்கப் பட்டுள்ளன. தமிழ் நாட்டில் 70 பெயர்களில் சீர் மரபினர் (Denotified communities) என்ற பட்டியலில் வைக்கப் பட்டன. அதில் 27 குறவர் குடி அழைப்புப் பெயர்களே. இந்தக் காலத்திலும், மேற்சொன்ன 70 பெயர்களில், 43 பிற சாதியினர் இருந்தும், மூளைச்சலவை செய்யப் பட்ட காவல் துறையியினரின் தொடர்ந்த கொடுமையால், குறவர் இனம் மட்டும் இன்னும் பழைய வீண் பழியிலிருந்து மீள முடியவில்லை. ஆள் பலம். அதிகார பலம், அரசியல் பலம் பணபலம் நான்குமே குறவர் பழங்குடிக்கு இல்லை. திருட்டு என்பது பொது உடைமை! அதுவென்னவோ குறவர் பழங்குடிக்கு மட்டுமே சொந்தமானது போன்ற மாயையை உருவாக்கிக் காவல் துறை, உலகையே நம்ப வைத்துக் கொண்டிருக்கிறது...*

9. ***இட ஒதுக்கீட்டு அவலம்*** *:. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை சீர்மரபினர் பட்டியலில் (* ***மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்கான ஒதுக்கீடு*** *) வைக்கப் பட்ட 70 பெயர்களில். பெரும்பாலானவை மூலச் சாதிப் பெயர்களின் அழைப்புப் பெயர்களே. குறவரினம், ஏற்கனவே எஸ்.சி., எஸ்.டி. ஒதுக்கீட்டுப் பட்டியல்களில் இருந்த போதிலும், டி.என்.சி. பட்டியலிலுள்ள குறவரின் 27 அழைப்புப் பெயர்கள் நீக்கப் படாததால், அந்த ஒதுக்கீட்டுப் பிரிவுகளில் சான்றிதழ் பெற முடியாமல், முன்னேற்றம் இன்றித் தவிக்கிறது*

10. *பிற சமூகங்களின் ஆள் மாறாட்ட ஏமாற்றுகள்* : *குறவரது தொன்மை சில தமிழர் அல்லாத குடிகள் தங்கள் உண்மையான தோற்றத்தை மறைப்பதற்காக "குறவர்" என்ற பெயரைப் பயன்படுத்த வழிவகுத்தது. பறவை பிடிப்பவர்களாக இருந்ததால், ராஜஸ்தான் மற்றும் குஜராத்தின் ஒரு பழங்குடி வாகிரி எனப் பட்டது, அவர்களின் மொழி இந்தோ-ஆரிய வாகிரிபோலி. தமிழகத்தில் பிழைக்க வந்த போது, அவர்கள் குருவிக்காரர்கள் மற்றும் நரிக்காரர்கள் (நரியையும் பிடித்ததால்) எனப் பட்டனர். நரியைக் குறிக்கும் நக்கலா என்ற பெயரும் உண்டு. பின்பு, நரியுடன் குறவர் என்ற வார்த்தை எப்படியோ சேர்ந்து விட்டது.. (நரிக் குறவர்), தமிழ் அடையாளத்தை பொய்யாக வலியுறுத்தும் முயற்சியில், அவர்கள் அதனைப் பயன் படுத்தி குறவர் தெய்வமான வள்ளியைத் தங்கள் தமக்கை யாகவும், முருகனைத் தங்கள் மைத்துனராகவும் உரிமை கோரத் தொடங்கினர்,. இந்த தவறான மாறாட்டம் மூலம், அவர்கள் தொடக்க காலத் தமிழ் பழங்குடியினரில் ஒருவராக வகைப் படுத்தப் படுவதில் வெற்றி பெற்றனர், துரதிருஷ்டவசமாக, படித்தவர்களிடையே கூடத் தொல் தமிழ் குறவர் மற்றும் ஆரியர் வழி வந்த நரிக் குறவர் இருவரும் ஒரே பழங்குடியைச் சேர்ந்தவர்களே என்ற தவறான கருத்துத் தொடர்கிறது.*

சமீபத்தில், ஜெய் பீம் என்ற பெயரில் ஒரு தமிழ் படம் வெளியானது. ஒரு உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தப் படம் எடுக்கப்பட்டதாகச் சொல்லப் பட்டது. அந்த படத்தில் இருளர் பழங்குடியினத்தைச் சேர்ந்த ஓர் இளைஞன் திருட்டு வழக்கில் பொய்யாக

இணைக்கப்பட்டு, விசாரணையின் போது, காவல்துறையினரால் உடல் ரீதியான சித்திரவதை காரணமாக அவர் இறந்துவிடுவதாகவும் காட்டப்பட்டது. ஆனால், உண்மையில் இறந்தவர் ராஜாக்கண்ணு என்ற குறவர் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர். ஆனால், இருளர் பழங்குடி மற்றும் அதன் சங்கம் இந்த ஆள்மாறாட்டம் மூலம் நிறைய நிதி உதவிகளைப் பெற்றன.

கிராமக் கோயில் திருவிழாக்களின் போது, குறவன்-குறத்தி ஆட்டம் என்ற பெயரில் நடன நிகழ்ச்சிகள் அடிக்கடி நடத்தப்படுகின்றன. இந்த ஆட்டத்திற்கு உண்மையான குறவர்களுடன் எந்த தொடர்பும் இல்லை. சங்க நூல்கள் அவர்களின் பண்டைய சடங்கு நடனங்களான வேலன் வெறியாடல், குரவைக் கூத்து மற்றும் வள்ளிக் கூத்து குறித்து மட்டுமே பேசுகின்றன, அவை முருக வழிபாட்டின் ஒரு பகுதியாக நிகழ்த்தப்பட்டன.

11. முடிவுரை : *குறவர் பழங்குடியினரின் வரலாறு ஒரு சமூகத்தின் கதை மட்டுமல்ல, தமிழ் நாகரிகத்தின் அடித்தளங்களைப் புரிந்துகொள்வதற்கான முக்கியத் திறவு கோலாகும். அவர்களின் கலாச்சார நடைமுறைகள், சமய மரபுகள் மற்றும் சங்க இலக்கியத்திற்கான பங்களிப்புகள் அவர்களது கண்ணியம் மிக்க உயரிய நாகரிக வாழ்க்கையை வெளிப் படுத்துகின்றன. இவர்களது வரலாறு அவர்தம் உயரிய நிலை, கட்டாய இடப் பெயர்வு, காலனித்துவ ஒடுக்குமுறை மற்றும் சமூகக் களங்கம் ஆகியவற்றால் எவ்வாறு மறைக்கப்பட்டது என்பதையும் வெளிப் படுத்துகிறது. முருகன் வழிபாடு தொடங்கி, வணிகம் மூலம் வாழ்வாதாரத்தை நிலை நிறுத்துவது வரை, குறவர்கள் ஒரு காலத்தில் தமிழ் சமூகத்தின் மையத்தில் நின்று, பின்னர் அதன் விளிம்புகளுக்குள் தள்ளப் பட்டனர். ஒரு காலத்தில் கோயில் சிலைகளைக் கையாளுதல் போன்ற சடங்கு நடை முறைகளுடன் ஒருங்கிணைந்த இந்த பழங்குடி, பின்னர் தீண்டாமையின் தீவிர ஓரங்கட்டலுக்கு உட்படுத்தப்பட்டு, அவர்களின் சொந்தச் சமய மரபுகளிலிருந்து துண்டிக்கப்பட்டது மிகப் பெரும் கொடுமை. எனவே மானுடவியலாளர்களும் வரலாற்று ஆசிரியர்களும் இந்த பழங்குடியினரைப் பற்றி விரிவான, ஆய்வை மேற்கொள்வது அவசியம்,* ***வரலாற்றில் அவர்களின் சரியான இடத்தை மீட்டெடுப்பது, அடிப்படையில், தமிழர் நாகரிகத்தின் இன்றியமையாத அத்தியாயத்தை மீட்டெடுப்பதாகும்.***

. தமிழ்நாட்டின் குறவர்களும் இலங்கையின் வேடர்களும் ஒரு பொதுவான வம்சாவளியைப் பகிர்ந்து கொள்கிறார்களா என்பதை அறிவியல் அடிப்படையில் நிறுவவும் இத்தகைய ஆராய்ச்சி முயற்சிக்க வேண்டும்.

காவடி மு.சுந்தரராஜன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (பணி நிறைவு), கொடிச்சி இல்லம், 25, குறிஞ்சி வீதி, மதினா நகர் கோவைபுதூர், கோயம்புத்தூர் 641042 மின்னஞ்சல் sundhararaajan.murugesan7@gmail.com அ.பே.9842231074

துணைநூற் பட்டியல் (References)

1. (https://ta.wiktionary.org/s/gz6)
2. https://agarathi.com/word/%E0%AE%9A%E0%AF%80%E0%AE%AF%E0%AE%BE%E 0%AE %A9%E0%AF%8D)

Vol. 20, No. 01 (October 2026) – Part III • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

3. மகாகவி பாரதியார் - பெல்ஜியம் வாழ்த்துக் கவிதை
4. Journal of Indian History -Vol. VII 1928 , Pre-Aryan Tamil culture P.T.Srinivas Ayengar
5. Southern India Its History, people and Industrial Resources,Somerset Playne
6. Dr, U. R. EHRENFELS, ph. D , Head of the Department of Anthropology, University of Madras,) 1952 KADAR OF COCHIN
7. Cochin tribes and castes. volume I 1909., (Page 11,178) -L. K. Anantha krishna iyer
8. Sri Lanka's Indigenous Wanniya -laeto: A Case History
9. The Veddas, Charles Seligmann , Brenda Seligmann
10. Advanced History of India, P.T. Srinivasa Iyengar page 2,3
11. Notes on Criminal Classes of the Madras Presidency 1892 . pages 48 and 49 of Chapter VI Frederick S. Mullaly
12. Games in Tholkappiyam and Akananooru -- T. Kavitha.
13. ஐவகை நிலங்களில் கூத்துகள் அன்றும் இன்றும்.' செ. மகேஸ்வரி
14. Dishonoured by history….. Dr Meena Radhakrishna
15. Madura country – A Manual, 1868J.H. Nelson (Chapter III, pages 67, 69)
16. Madura Gazetteer page 93 & 94 ..... 17,18. Salem Gazetteer Page 152 (Foot Note)
17. அகநானூறு,, புற நானூறு,, ஐங்குறுநூறு, திருமுருகாற்றுப் படை, மலைபடு கடாம், மீனாட்சியம்மை குறம். திருக்குற்றாலக் குறவஞ்சி, தொல்காப்பியம், நற்றிணை, குறுந்தொகை, குறிஞ்சிப் பாட்டு.
18. Early Tamil Epigraphy From the Earliest Times to the Sixth Century by Iravatham Mahadevan Page 143